உ
சிவமயம்



அமரர்

# திரு. சுப்பையா நாகேந்திரன்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவுமலர்

02-08-2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



கைதடி வடக்கு, கைதடியைப் பிறப்பிடமாகவும்
அம்மன் வீதி, நல்லூரை வதிவிடமாகவும் கொண்ட

அமரர்

# திரு. சுப்பையா நாகேந்திரன்

அவர்களின்

சிவபதப்பேறு குறித்து வெளியிடப்படும்

# நினைவு மலர்

02.08.2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

காரமுத மாதிரியாய்...

கண்ணழுதும் இங்கு,

தீரலையே சோகம்

தவிக்கிறதே நெஞ்சம்

ஆரமுதாய்.... வாய்த்தவரே!

அழகொளிரும் வெண்ணிலவே!

பாரமதாய் பிரிவை

பகிர்ந்தளித்துப் போனாய்

பூரிப்பைத் தந்தவரே!

சிங்கார நாளிழந்து போனோம்

தூர நீ பறந்ததனால்....

தூழியிலே தவிக்கின்றோம்

ஈரவிழி உந்தனையே


எத்திசையும் தேடிநிற்க,

ஆரமென இம்மலரைத்

தருகின்றோம் உன்னடிக்கு....

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மண்ணில்
14-06-1938

விண்ணில்
03-07-2018

## அமரர்

# திரு. சுப்பையா நாகேந்திரன்

### திதிநிர்ணய வெண்பா

ஆண்டு விளம்பி ஆனிபத்தொன்பது அருளால்
பூண்டபுதிர் அபரபக்க சஷ்டிதிதி – நீண்ட புகழ்
நாகேந்திரனார் நாவாற திருப்பா பாடி
செவ்வாய் தனில் இறையடி இணைநாள் காண்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

**விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்**
**விநாயகனே வேட்கை தணிவிப்பான் – விநாயகனே**
**விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினாற்**
**கண்ணிற் பணிமின் கனிந்து**

## தேவாரம்

முன்னம் அவனுடைய நாமங் கேட்டாள்
மூர்த்தி யவனிருக்கும் வண்ணங் கேட்டாள்
பின்னை யவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சி யானாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசா ரத்தைத்
தன்னை மறந்தாள் தன் னாமங் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

இடர்கெடுத் தென்னை ஆண்டுகொண் டென்னுள்
இருட்பிழம் பறவெறிந் தெழுந்த
சுடர்மணி விளக்கின் உள்ளொளி விளங்குந்
தூயநற் சோதியுட் சோதீ!
அடல்விடைப் பாகா! அம்பலக் கூத்தா!
அயனொடு மாலறி யாமைப்
படரொளி பரப்பிப் பரந்துநின் றாயைத்
தொண்டனேன் பணியுமா பணியே.

## திருவிசைப்பா

பால்நினைந் தூட்டுந் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

## திருப்பல்லாண்டு

மிண்டு மனத்தவர் போமின்கண்
மெய்யடி யார்கள் விரைந்துவம்மின்
கொண்டுங் கொடுத்தும் குடிகுடி
ஈசற்காட் செய்மின் குழாம்புகுந்து
அண்டங் கடந்த பொருள்அள
வில்லதோர் ஆனந்த வெள்ளப்பொருள்
பண்டும் இன்றுமென்றும் உள்ள
பொருளென்றே பல்லாண்டு கூறுதுமே.

## பெரியபுராணம்

ஆதியாய்நடுவு மாகி அளவிலா வளவுமாகிச்
சோதியாய் உணர்வுமாகித் தோன்றிய பொருளுமாகிப்
பேதியா வேகமாகிப் பெண்ணுமா யாணுமாகிப்
போதியா நிற்கும் தில்லைப்பொதுநடம் போற்றி போற்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

முத்தைத்தரு பத்தித் திருநகை
அத்திக்கிறை சத்திரச் சரவண
முத்திக்கொரு வித்துக்குருபர எனவோதும்
முக்கட்பர மற்குச் சுருதியின்
முற்பட்டது கற்பித் திருவரு
முப்பத்துமு வர்க்கத் தமரரு மடிபேண
பத்துத்தலை தத்தக் கணைதொடு
ஒற்றைக்கிரி மத்தைப் பொருதொரு
பட்டப்பகல் வட்டத் திகிரியி லிரவாகப்
பத்தற்கிர தத்தைக் கடவிய
பச்சைப்புயல் மெச்சத் தகுபொருள்
பக்ஷசத்தொடு ரக்ஷித் தருள்வது மொருநாளே
தித்தித்தெய வொத்தப்பரிபுர
நிர்த்தப்பதம் வைத்துப் பயிரவி
திக்கொட்கந டிக்கக் கழுகொடு கழுதாடத்
திக்குப்பரி அட்டப் பயிரவர்
தொக்குத்தொகு தொக்குத் தொகுதொகு
சித்ரப்பவு ரிக்குத்த்ரிகட எனவோதக்
கொத்துப்பறை கொட்டக் களமிசை
குத்திப்புதை புக்குப் பிடியென முதுகூகை
கொட்புற்றெழ நட்பற் றவுணரை
வெட்டிப்பலியிட்டுக் குலகிரி
குத்துப்பட வொத்துப் பொரவல பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக வுலகமெலாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் திரு. சுப்பையா நாகேந்திரன் அவர்களின்
# வாழ்க்கை வரலாறு

இந்து சமுத்திரத்தின் முத்து என வர்ணிக்கப்படும் கடலாற் சூழப்பெற்ற ஈழத்திருநாட்டின் கலையெனத் திகழும் யாழ்ப்பாண த்தின் பிரிவுகளான வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம் மூன்றையும் இணைக்கும் அழகிய கிராமமே கைதடி ஆகும். அங்கு சைவப் பெருமக்கள் நிறைந்து வாழும் கைதடி வடக்கின் கயற்றசிட்டி கந்தன் அருள் பாலிக்கும் மானம்பிராய் முதலியார் வழித்தோன்றலாகிய ஆறுமுகம் சுப்பையா மற்றும் அம்மையார் இலட்சுமிப்பிள்ளை ஆகிய இருவரின் இல்லறமாம் நல்லறத்தின் பயனாக வந்துதித்த முத்துக்கள் நால்வர். அதில் மூத்தவர் அமரரான இராமலிங்கம். இவர் நீதிமன்றப் பதிவாளராகக் கடமை யாற்றியவர் ஆவார். அடுத்தவரான அமரர் சரஸ்வதிதேவியைத் தொடர்ந்து அமரரான நாகேந்திரன் வந்துதித்தார். இளையவராக சிவபாக்கியம் பிறந்தார்.

குறும்பும் குதூகலமும் கழிந்த அவரின் பொழுதுகள் பின் ஆரம்பக்கல்வியை அருகிலிருந்த குருசாமி வித்தியாசாலையிலும் பின்பு அருகில் அறிவு தேடி CMS பாடசாலையிலும் உயர் கல்வியை கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியிலும் பெற்றார்.

பின்னர் தனது தொழில் தேடி அநுராதபுரத்தில் மலேரியா தடுப்புப்பிரிவிலும் அதன் பின்னர் இலிகிதராக அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தில் களுத்துறை, கொழும்பு ஆகிய பிரதேசங் களில் கடமையாற்றி வந்தார்.

என்றும் புன்னகை பூத்த முகமும் நேர்த்திய பார்வையும் அனைவரையும் கவரும் உள்ளம் கொண்டவர் அமரர் நாகேந்திரன். இவர் லிகிதராகப் பணியாற்றிய நேரத்தில் தனது தந்தையாருடன் பிறந்த சகோதரி சுப்பிரமணியம் தங்கம்மா தம்பதியினரின் உத்தம புத்திரி ராதா எனச் செல்லமாக அழைக்கப்படும் மகேஸ்வரியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணம் புரிந்து நல்லறத்தின் பயனாக மிதிலா, டர்ஷன், சஷிதரன் எனும் செல்வங்களைப் பெற்றுக் கொண்டார்.

தேசிய சேமிப்பு வங்கியில் பணிபுரியும் மிதிலா அதே வங்கியில் பணிபுரியும் மயூரன் என்பவரைக் கரம் பற்றி அக்ஷயா, அஸ்னிகா எனும் இரு செல்வங்களைப் பெற்றுக் கொண்டனர்.

கொழும்பில் பணிபுரியும் டர்ஷன் ஆசிரியரான சிவாஜினி என்பவரைத் திருமணம் செய்து காருண்ஜா, வருணிகா எனும் செல்வங்களைப் பெற்றுக் கொண்டார்.

இளைய மகன் சஷிதரன் புருணையில் பணிபுரியும் வேளையில் தனது உறவுக்காரப் பெண்ணான பிரபாலினியை மணம் புரிந்து பிருத்திகா, சிருஷ்ரிகா, சதுர்சிகா எனும் செல்வங் களைப் பெற்றனர்.

அமரர் நாகேந்திரன் அவர்கள் ஓய்வுபெற்ற பின்னரும் ஓய்ந்து போகாமல் தான் கற்ற குருசாமி பாடசாலையிலேயே பகுதி நேர ஆங்கில ஆசிரியராகக் கடமையாற்றி பல மாணவர்களின் வெற்றிக்கு உறுதுணை புரிந்தார். அத்தோடு கைதடி கயற்றசிட்டி முருகன் ஆலயத்தின் பரிபாலன சபையில் அங்கம் வகித்ததோடு ஆலய வளர்ச்சிக்காக அயராது பாடுபட்டார். இவர் தனது வாழ்க்கைக் காலத்தில் மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் மட்டுமன்றி உற்றார், உறவினர், நண்பர்கள் என அனைவரது அன் பையும் ஆதரவினையும் பெற்று வாழ்ந்தவர் என்பது நிதர்சனமான உண்மை.

பிறந்தவர் எவரும் இறப்பது நியதி என்னும் அன்னாரின் இழப்பு குடும்பத்தாருக்கு மிகப் பெரும் வேதனையைக் கொடுத் திருக்கும் என்பதில் ஐயமில்லை.

வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்தவர் வானுறையும் தெய்வத் துள் வைக்கப்படும் என்ற வள்ளுவன் வாக்கிற்கமைய *03.07.2018* அன்று தனது எண்பதாவது வயதில் ஞாசி தீர்த்தத்தோடு அன்னாரின் ஆன்மா கயற்றசிட்டி கந்தனுடன் இரண்டறக் கலந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புள்ள தாத்தா

எங்கள் தாத்தா நீங்கள் வரும்வரை
நான் மிகவும் ஆவலாக உள்ளேன்.
நீங்கள் அடுத்த பிறவை எடுத்து
சீக்கிரம் வாருங்கள் தாத்தா
நீங்கள் தூர இடத்திற்கு
சென்று வரும் போது
என்னைத் தூக்கும் போது
நான் அழுதேன்.
இந்த விடயம் எனக்கு
இப்பொழுதும் ஞாபகத்தில்
உள்ளது தாத்தா
என் வீட்டில் ஒருவரும்
இறக்கவில்லை என்ற
செய்தியைக் கேட்டு
இன்பமாக இருந்தது.
கடைசியில் நீங்கள் இறந்த
செய்தியைக் கேட்டு
மனம் துடிக்கிறது தாத்தா
தாத்தா திரும்பவும் நீங்கள்
படுத்த இடத்தில் இனி
யாரைப் பார்ப்பேன் தாத்தா
முதல் எம் வீடு எவ்வளவு
குதூகலமாக உள்ளது.
இப்பொழுது நீங்கள்
இல்லை என்ற செய்தியை
கேட்கும்போது எமது வீடே
கவலைப்படுகிறது தாத்தா.
எப்பொழுதும் என் பிறந்த
தினத்திற்கு இருப்பீர்கள்
இப்பொழுது நீங்கள் இல்லையே தாத்தா...

இப்படிக்கு பாசமிகு பேர்த்தி
ம. அக்ஷயா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புள்ள தாத்தா

அன்புடன் அரவணைப்பீர்களே தாத்தா
எனது பிறந்தநாளுக்காக சிரித்து மகிழ்ந்தீர்களே தாத்தா
நாங்கள் இருக்கும்போதெல்லாம் எங்களை அழைப்பீர்களே
அம்மா பாடம் சொல்லி பேசும்போது
பேசவிடாமல் பாதுகாப்பீர்களே
இப்போது வந்த உங்கள்
மரணச் செய்தியை எங்களால்
நம்ப முடியவில்லையே தாத்தா...

இப்படிக்கு பாசமிகு பேர்த்தி
ம. அஸ்னிகா

# அன்புள்ள அப்பப்பா

எங்கள் அப்பப்பா நீங்கள் வரும்வரை
நான் ஆவலாக உள்ளேன்
அடுத்த பிறவி எடுத்து வாங்கள்
நீங்கள் இறந்த செய்தியைக் கேட்டு
நான் திகைத்துப் போனேன்
அப்பப்பா எல்லோரும் அழுகின்றோம்
அப்பப்பா என்பிறந்தநாளுக்கு
நீங்கள் இருக்க மாட்டீர்களா? அப்பப்பா....

இப்படிக்கு பாசமிகு பேர்த்தி
ட. காருண்யா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புள்ள அப்பப்பா

நீங்கள் இறந்த செய்தியைக்
கேட்டு என் மனம் துடிக்கின்றது
எனக்கு மிகவும் கவலையாக
இருக்கின்றது அப்பப்பா
இனி நான் உங்களை எப்பொழுது
சந்திப்பேன் அப்பப்பா

இப்படிக்கு பாசமிகு பேர்த்தி
ட. வருணிகா

# அன்புள்ள அப்பப்பா

எனது பிறந்தநாளின் போது சுகமாக இருந்தீர்களே அப்பப்பா.
எனது தங்கைகளைத் தட்டிச் சிரித்து மகிழ்ந்தீர்களே.
உங்கள் பிறந்தநாளை மகிழ்வாகக்
கொண்டாடினோமே அப்பப்பா.
நீங்கள் படுத்த இடத்தில்
இனி யாரைக் காண்போம் அப்பப்பா.

இப்படிக்கு பாசமிகு பேர்த்தி
ச. பிருத்திகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனைவி மற்றும் பிள்ளைகளுடன்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனைவி மற்றும் மருமக்களுடன்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனைவி,பிள்ளைகள்,மருமக்கள் மற்றும் பேரப்பிள்ளைகளுடன்....




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனைவி மற்றும் பேரப்பிள்ளைகளுடன்....




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



மலர்வு 14 06 1938

உதிர்வு 03 07 2018

எமது வங்கி முகாமையாளர் திரு.தி.மயூரன்

அவர்களின் பாசமிகு மாமனார்

## அமரர்

## சுப்பையா நாகேந்திரன்

கள்ளமில்லா உள்ளத்துடன்

எல்லோருடனும் உறவாடினீர்

கால நியதியினால் காலன் உமை

கவர்ந்துவிட்டான் கலங்குகின்றோம் - நாம்

அடைக நின் ஆத்மா சாந்தி!

அன்னாரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி!!!!!!!!

பிரிவால் துயருறும்

ஊழியர்கள்

தேசிய சேமிப்பு வங்கி

காரைநகர் கிளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழமொழிகள்

01. அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்.
- விடாமுயற்சி பலன் தரும்

02. அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி
- முன்மாதிரி

03. ஆழம் அறியாமல் காலை விடாதே
- எதையும் ஆராய்ந்து செய்தல் வேண்டும்

04. ஆனைக்கொரு காலம் பூனைக்கொரு காலம்
- காலம் மாறும்

05. இக்கரை மாட்டுக்கு அக்கரைப் பச்சை
- திருப்தியற்ற மனம்

06. இட்டுக்கெட்டார் எங்கும் இல்லை
- தர்மம் செய்

07. உண்ணாச் சொத்து மண்ணாப் போகும்
- உலோபங் வடாது

08. எடுக்கிறது பிச்சை ஏறுவது பல்லக்கு
- வீண் பெருமை

09. அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு
- ஒற்றுமையே பலம்

10. அகத்தின் அழகு முகத்தில் தெரியும்
- உள்ளத்துச் சிந்தனை முகத்தில் தெரியும்

11. காற்றுள்ள போதே தூற்றிக் கொள்
- சந்தர்ப்பத்தைத் தவறவிடக்கூடாது

12. வல்லவனுக்கப் புல்லும் ஆயுதம்
- திறமையில் நம்பிக்கை

13. ஆத்திரக் காரனுக்குப் புத்தி மத்திமம்
- கோபம் சிந்தனைக்கு இடையூறு

14. அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு
- எதையும் அளவோடு செய்தல் வேண்டும்

15. இளங்கன்று பயமறியாது
- வாலிபத் துணிவு

16. இளமையில் கல்வி சிலையில் எழுத்து
- இளமையில் கற்ற கல்வி என்றும் நிலைத்திருக்கம்.

17. கடுகு சிறிதாயினும் காரம் பெரிது
- சிறியதென்றாலும் சிறப்புண்டு

18. கந்தையானாலும் கசக்கிக் கட்டு
- வறுமையிலும் செம்மையாக வாழ வேண்டும்.

19. பேராசை பெருந்தரித்திரம்
- எல்லை கடந்த ஆசை துன்பந்தரும்

20. எய்தவன் இருக்க அம்பை நோவானேன்
- தப்பான அபிப்பிராயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# PROVERBS
# (பழமொழிகள்)

*01.* While in Rome be a Roman

ஊருடன் ஒத்து வாழ்

*02.* As you sow shall you reap

தினை விதைப்பவன் தினை அறுப்பான்

வினை விதைப்பவன் வினை அறுப்பான்

*03.* To the good the world appears good

நல்லவனுக்கு உலகம் முழுவதும் நல்லதாகவே தெரியும்

*04.* An empty vessel makes noise

நிறைகுடம் தளும்பாது குறைகுடம் தளும்பும்

*05.* Health is wealth

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்

*06.* Time once lost, is lost forever

நழுவிப் போன சந்தர்ப்பம் திரும்பி வராது

*07.* Union is strength

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

*08.* Barking dogs seldom bite

குரைக்கிற நாய் கடிக்காது

*09.* Brids of the same feather flock together

இனம் இனத்தைச் சேரும்

*10.* Where there is a will, there is a way

மனமிருந்தால் மார்க்கமுண்டு

*11.* A bad carpenter quarrels with his tools

ஆடத் தெரியாதவன் அரங்கு கோணல் என்றாளாம்.

*12.* Silence is half consent

மௌனம் பாதி சம்மதத்திற்கு அறிகுறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13) The more haste, the worse the speed

அவசரப் புத்தி காரியத்தைக் கெடுக்கும்

14) A burnt child dreads the fire

சூடு கண்ட பூனை அடுப்பங்கரை நாடாது

15) A honey tongue a heart of gall

படிப்பது தேவாரம் இடிப்பது சிவன்கோயில்

16) All's well that ends well

முடிவு நல்லதானால் எல்லாம் நல்லதே

17) Style makes the man

ஆள் பாதி, ஆடை பாதி

18) One lie leads to another

பொய்க்கு எல்லை இல்லை

19) It takes all sorts to make the world

உலகத்தார் பலவிதம்

20) A friend in need is a friend indeed

ஆபத்தில் உதவுபவன் நண்பன்

21) The face is the index of the mind

அகத்தின் அழகு முகத்தில் தெரியும்

22) The mills of god grind slow but sure

அரசன் அன்று கொல்லும் தெய்வம் நின்று கொல்லும்

23) Make hay while the sun shines

காற்றுள்ள போதே தூற்றிக் கொள்

24) Every bird must hatch its own eggs.

அழுதாலும் பிள்ளை அவள் தானே பெற வேண்டும்

25) Too much of anything is good for nothing

அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு

26) Look before you leap

ஆழமறியாமல் காலை விடாதே

27) Good homer sometimes nods

ஆனைக்கும் அடி சறுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவுகள் மேம்பட...

* நானே பெரியவன், நானே சிறந்தவன் என்ற அகந்தையை (Ego) விடுங்கள்.
* அர்த்தமில்லாமலும் பின்விளைவு அறியாமலுமே பேசிக்கொண்டே யிருப்பதை விடுங்கள். ( Loose Talks)
* எந்த விஷயத்தையும், பிரச்சினையையும் நாசூக்காகக் கையாளுங்கள் (Diplomacy) விட்டுக்கொடுங்கள் ( Compromise)
* சிலநேரங்களில் சில சங்கடங்களைச் சகித்துத்தான் ஆக வேண்டும் என்று உணருங்கள் (Tolerance)
* நீங்கள் சொன்னதே சரி, செய்ததே சரி என்று வாதாடாதீர்கள் (Adamant Argument) குறுகிய மனப்பான்மையை விட்டொழியுங்கள் (Narrow Mindedness)
* உண்மை எது? பொய் எது? என்று விசாரிக்காமல் இங்கே கேட்டதை அங்கே சொல்வதையும், அங்கே கேட்டதை இங்கே சொல்வதையும் விடுங்கள். (Carrying Tales)
* மற்றவர்களை விட உங்களையே எப்போதும் உயர்த்தி நினைத்து கர்வப்படாதீர்கள் ( Superiority Complex)
* அளவுக்கதிகமாய் தேவைக்கதிகமாய் ஆசைப்படாதீர்கள் (Over Expectation)
* எல்லோரிடத்திலும், எல்லா விஷயங்களையும் அவர்களுக்குச் சம்பந்தம் உண்டோ, இல்லையோ சொல்லிக்கொண்டிருக்காதீர்கள்.
* கேள்விப்படுகின்ற எல்லா விஷயங்களையும் நம்பிவிடாதீர்கள்.
* அற்ப விஷயங்களைப் பெரிதுபடுத்தாதீர்கள்.
* உள்கள் கருத்துக்களில் உடும்புப்பிடியாய் இல்லாமல், கொஞ்சம் தளர்த்திக் கொள்ளுங்கள் ( Flexibiliyt)
* மற்றவர் கருத்துக்களை, செயல்களை, நடக்கின்ற நிகழ்ச்சிகளைத் தவறாகப் புரிந்து கொள்ளாதீர்கள் ( Misunderstanding)
* மற்றவர்களுக்குரிய மரியாதை காட்டவும், இனிய, அதமான சொற் களைப் பயன்படுத்தவும் தவறாதீர்கள் ( Courtesy)
* புன்முறுவல் காட்டவும், சிற்சில அன்புச் சொற்களைச் சொல்லவும் கூட நேரமில்லாதது போல் நடந்து கொள்ளாதீர்கள்.
* பேச்சிலும், நடத்தையிலும் பண்பில்லாத வார்த்தைகளையும், தேவையில் லாத மிடுக்கையும் காட்டுவதைத் தவிர்த்து; அடக்கத்தையும் பண்பையும் காட்டுங்கள்.
* அவ்வப்போது நேரிற் சந்தித்து மனம் திறந்து பேசுங்கள்.
* பிரச்சினைகள் ஏற்படும் போது அடுத்தவர் முதலில் இறங்கிவர வேண்டும் என்று காத்திருக்காமல் நீங்களே பேச்சை ஆரம்பிக்க முன் வாருங்கள்.
* காலம் தந்த கசப்புக்களை மறந்துவிடு. ஆனால், காலம் தந்த படிப்பினைகளை மறந்துவிடாதே.
* தோல்வி வந்தால் அது உனக்குப் பிரியமானதாகக் காட்டிக் கொள். வெற்றியடைந்தால் அது மிகவும் பழக்கப்பட்டது போல காட்டிக்கொள். இது தான் வார்க்கையின் நோக்கமாகக் கொள்.
* முடிந்துவிட்டதென்று வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைத்து விடாதீர்கள் முற்றுப்புள்ளியில் இருந்துதான் கோலம் தொடங்குகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றென்றும் எங்கள் நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகள்....

"பயன் தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலிற் பெரிது"



எமது குடும்ப விளக்கு **அமரர் திரு. சுப்பையா நாகேந்திரன்** அவர்கள் அணைந்த செய்திகேட்டு உடன் வந்து உதவியவர்களுக்கும், மரணச் சடங்கில் கலந்து கொண்டோர்க்கும், இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்களுக்கும், தொலைபேசி, இணையம், தொலைநகல் மூலம் துயர் பகிர்ந்தவர்களுக்கும், இன்றைய அந்தியேட்டி, சபிண்டீகரணக் கிரியைகளிற் கலந்து கொண்டு ஆத்மசாந்திக்காகப் பிரார்த்தித்தவர்களுக்கும், இம் மலரினை அழகுற அச்சிட்டுத் தந்த கரிகணன் (தனியார்) நிறுவனத்தினருக்கும், எமது இதயம் நிறைந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**குடும்பத்தினர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச

ஆறுமுகம் + க

↓

சுப்பையா + இல

↓

இராமலிங்கம்
+
பாக்கியம்

சரஸ்வதிதேவி
+
தியாகராஜா

↓

தயாபரன் தயாளினி தயாசக்தி தயாமதி

மிதிலா
+
மயூரன்
↓
அக்ஷயா
அஸ்னிகா

டர்ஷன்
+
சிவாஜினி
↓
காருண்யா
வருணிகா

சஷிதரன்
+
பிரபாலினி
↓
பிருத்திகா
சதுர்சிகா
சிருஷ்ரிகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ா வழி

கதிராசிப்பிள்ளை ✦

லட்சுமிப்பிள்ளை ✦

நாகேந்திரன்
+
மகேஸ்வரி

சிவபாக்கியம்
+
நடராசா

பிரதீபன்  நுதர்சினி✦  பார்த்தீபன்

ா

ரி

கா

ா

கா

✦ அமரர்களைக் குறிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கிறது
எது நடக்க இருக்கிறதோ
அதுவும் நன்றாகவே நடக்கும்
உன்னுடையதை எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய் அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருந்தாய் அது வீணாவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது
எதைக் கொடுத்தாயோ
அது இங்கேயே கொடுக்கப்பட்டது
எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவருடையதாகிறது
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்
இதுவே உலக நியதியும்.
எனது படைப்பின் சாராம்சமுமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org